# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு

## அலகு 2: இலக்கண ஆசிரியர்களின் திறனாய்வுக் குறிப்புகள்

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை
17.08.2020

# திறனாய்வு – புதியதா? பழையதா?

## திறனாய்வு – புதிய சரக்கு

ஐரோப்பியர் வருகைக்குப் பிறகுகே தமிழில் திறனாய்வு புதிய சரக்காகத் தோன்றியது எனக் கருதியவர்கள்: இரகுநாதன், க.நா. சுப்ரமணியம், சி.சு. செல்லப்பா, அ.ச. ஞானசம்பந்தன், ச. அகத்தியலிங்கம் முதலானோர்.

## திறனாய்வு – பல வகைகளில் தொடர்ந்து நடந்து வந்துள்ளது

தமிழ் இலக்கியச் சாதனைகளுக்கு ஆழமான திறனாய்வு வேலைப்பாடுகளே காரணம். இல்லாவிட்டால் இலக்கிய அழகியலில் இந்த அளவிற்குச் சாதனைகளைத் தமிழிலக்கியம் செய்துகாட்டியிருக்க முடியாது. ஏ.வி. சுப்பிரமணிய அய்யர், செந்தில்நாதன், மு. வரதராசன், கா. செல்லப்பன், கைலாசபதி, கா. மீனாட்சிசுந்தரம், தெ.பொ.மீ. வ.சுப. மாணிக்கம் முதலானோர்.

# திறனாய்வு வேலைப்பாடுகள்

## தமிழில் நடந்துள்ள திறனாய்வு வேலைப்பாடுகள்

1. இலக்கண ஆசிரியர்களின் திறனாய்வுக் குறிப்புகள்
2. இலக்கியப் படைப்பாளிகளின் திறனாய்வுக் குறிப்புகள்
3. உரையாசிரியர்களின் திறனாய்வு
4. திருவள்ளுவ மாலையும் திறனாய்வும்

## தமிழ் இலக்கணம் – இலக்கியத் திறனாய்வு

தமிழ் இலக்கிய மரபிலே இலக்கணம்தான் ஓரளவுக்கு இலக்கிய விமரிசனம் செய்ய வேண்டிய காரியத்தையும் செய்ய முற்பட்டு வந்திருக்கிறது – க.நா. சுப்ரமணியம்

# தொல்காப்பியம்

(1) முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணியும்

(2) பாடலுல் பயின்றவை நாடியும்

தொல்காப்பியர் உருவாக்கிய கோட்பாடுகள்

1. எழுத்து, 2. சொல், 3. பொருள்

என மூன்று அதிகாரங்களில் தொகுக்கப்பட்டுள்ளன.

---

திறனாய்வினால் கோட்பாடுகள் உருவாவதும்

கோட்பாடுகளினால் திறனாய்வு செழுமை பெறுவதும்

மனித நடவடிக்கைகளின் சாரமாக அமைந்துள்ளன.

# தொல்காப்பியம்

இலக்கியத் திறனாய்வும் இலக்கியக் கோட்பாடுகளும் ஒன்றையொன்று பின்னிப் பிணைந்தவை – ஏ.சி. சர்ச்சு

---

வடமொழி ஆய்வாளர் திவேதி: அலங்காரம், தொனி, ரீதி, லட்சணம், குணம், தோஷம் ஆகியவற்றைத் திறனாய்வுக் கோட்பாடுகளாகக் கொள்கிறார். தொல்காப்பியத்தின் மெய்ப்பாடு, உவமை, உள்ளுறை, வனப்பு, வண்ணம், மரபு ஆகியவற்றைத் தமிழ்த் திறனாய்வுக் கோட்பாடுகளாகக் கொள்ளலாம் – சி. கனகசபாபதி

---

தொல்காப்பியக் கோட்பாடுகள் தமிழர்தம் அழகியல் கோட்பாடுகள் – தெ.பொ.மீ.

---

மனோத்த்துவ உண்மைகளின் அடிப்படையில் எழுந்த ஓர் அற்புதமான இலக்கிய சம்பிரதாயக் கலை – ஏ.வி. சுப்பிரமணிய அய்யர்

# தொல்காப்பியம்

## தொல்காப்பியரின் இலக்கியச் சிந்தனைகளில் இன்றைய திறனாய்வுச் சிந்தனைகள்

### தெ.பொ.மீ:

1. செய்யுள் உறுப்புகளாகத் தொல்காப்பியர் கூறியுள்ளவை, அரிஸ்டாட்டிலின் உறுப்பியல் கோட்பாட்டோடு ஒத்து எண்ணத்தக்கவை.

2. கவிதையின் உள்ளடக்கமும் வடிவமும் பிரிக்கமுடியாதவை.

### கைலாசபதி:

அவயவிக் கொள்கை (Organic Theory)யில் பொருள், வடிவம் என்ற வேறுபாடு இல்லை. இரண்டும் கூறுகளாக – உறுப்புகளாக – இசைவுபட்டே உயிருள்ள கவிதை பிறக்கிறது. தொல்காப்பியம் செய்யுளியல் முதற் சூத்திரத்தை நோக்குவோர்க்கு இது புலனாகும்.

## தொல்காப்பியரின் இலக்கியச் சிந்தனைகளில் இன்றைய திறனாய்வுச் சிந்தனைகள்

தமிழவன்:

இலக்கிய ஆக்கத்திற்குத் துணை நிற்கும் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய அனைத்தையும் ஒட்டுமொத்தமாக இணைத்து ஆராய்ந்திருக்கும் தொல்காப்பியரின் பார்வையானது, மொழியை முதன்மைப்படுத்தி, இலக்கியத்தை ஆராய்கிற அமைப்பியல் திறனாய்வாளருள் ஒருவரான ரோலன் பார்த்தின் திறனாய்வுத் தன்மையோடு ஒத்திருக்கிறது.

---

தொல்காப்பியத் திறனாய்வுச் சிந்தனை: வடிவமா? உள்ளடக்கமா? என்று தொடர்ந்து பேசப்பட்டு வரும் ஆழமான திறனாய்வுச் சிக்கலைத் தொல்காப்பியரின் முழுமையான பார்வை எளிதாகத் தீர்த்து வைத்துவிடுகிறது.

# தொல்காப்பியம்

தொல்காப்பியம் இலக்கண நூலாகவும் கவிதையியலாகவும் அமைந்தது – தெ.பொ.மீ.

## தொல்காப்பியரின் இலக்கியப் புலமை

1. நாடக வழக்கு உலக வழக்கு எனப் பாகுபாடுத்திப் பேசுவது.
2. பா, நூல், உரை, பிசி, முதுமொழி, வாய்மொழி, அங்கதம் என இலக்கிய வகைகளை விளக்குவது.
3. உத்திகளைத் தொகுத்துக் கூறுவது.
4. மரபுக்கு அழுத்தம் தருவது.

## தொல்காப்பியரின் அறநெறிப்பட்ட திறனாய்வுச் சிந்தனை

உலகம் முழுவதும் இலக்கியத்தில் அறக்கோட்பாடே முதன்மை பெற்றது.

பிளேட்டோ, அரிஸ்டாட்டில் – அறப்பார்வையை வலியுறுத்தினர்.

### தொல்காப்பியம்

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு

அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின் – என அறநெறிப்பட்டதாக விளங்குகிறது.

## தொல்காப்பியரின் கோட்பாட்டு உருவாக்கத் திறனாய்வு

எல்லாவகைப்பட்ட திறனாய்வுக் கொள்கைகளும்

1. போலச்செய்தல் கொள்கை (Mimetic Theory)
2. வெளியீட்டுக் கொள்கை (Expressive Theory)
3. பயனீட்டுக் கொள்கை (Pragmatic Theory)
4. புறநிலைக் கொள்கை (Objective Theory) ஆகிய நான்கு வகைப்பட்டன - ஆப்ராம்சு

---

கோட்பாட்டு விதிகளை உருவாக்குவதாக அமைந்த தொல்காப்பியம் வெளியீட்டுக் கொள்கையாக அமைகிறது. பயனீட்டுக் கொள்கை, புறநிலைக் கொள்கைகளின் தன்மைகளும் காணக்கிடக்கின்றன.

---

தொல்காப்பியர், அவரைத் தொடர்ந்துவரும் இலக்கண ஆசிரியர்கள் திறனாய்வுகளைக் கோட்பாட்டு உருவாக்கத் திறனாய்வு எனப் பெயரிடலாம்.

# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு

அலகு 2:

இலக்கண ஆசிரியர்களின் திறனாய்வுக் குறிப்புகள் - 2

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

19.08.2020

## இடைக்கால அரசியல் மாற்றங்களின் விளைவுகள்

1. பண்பாட்டுத் துறைகளான மதம், கல்வி, கலை, இலக்கியம் ஆகிய அனைத்திலும் சமஸ்கிருதச் செல்வாக்கு ஓங்கி வளர்ந்தது.

2. தமிழறிஞர்கள் சமஸ்கிருதத்தில் சிந்தித்தார்கள்; எழுதினார்கள்.

> தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி தொல்காப்பியர் விட்ட இடத்திலேயே நின்றுள்ளது; பின் வளரவில்லை – மு. வரதராசனார்

இடைக்காலத்தில் சங்க இலக்கியங்களை மீட்டெடுக்க அகத்திணை, புறத்திணைக் கோட்பாட்டு நூல்கள் தோன்றினாலும் அவர்கள் காலத்தில் தோன்றிய பக்தி இலக்கியங்களை, புராண இலக்கியங்களை விளக்குவதற்குக் கோட்பாடுகளை உருவாக்கத் தவறிவிட்டனர்.

# நன்னூல்

பவணந்தியார் இயற்றிய நன்னூல் எழுத்து, சொல் பற்றிய இலக்கண நூல்

இலக்கியம் பற்றிய திறனாய்வுக் குறிப்புகள் அதில் உள்ளன.

தொல்காப்பியரைப் போலவே மரபைப் பெரிதும் வலியுறுத்துகிறார்.

பழையன கழிதலும் புதியன புகுதலும்

வழுவல கால வகையினானே - பழமைக்கும் புதுமைக்கும் இணைப்பை உருவாக்குகிறார்.

இலக்கிய உலகம் பற்றிய நுண்மாண் நுழைபுலத்தைப் புலப்படுத்தும் சிந்தனை.

பாயிரவியலில்

நெய்வது போன்றது நூலாக்கம் என்று கூறுகிறார்.

பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போல் பல
சொல்லாற் பொருட்கு இடனாக வுணர்வினில்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள் (சூ. 268)

1. இலக்கியத்துக்கு உயிர் போன்றது கருத்து

2. உடல் போன்றது வடிவம்

3. படைப்பவன் உணர்வினில் வல்லவனாக, அழகுற வெளியிட அறிந்தவனாக அமையவேண்டும்.

# நன்னூல்

நூலாக்கத்தில் உள்ள நுட்பமான வேலைப்படுகளை எடுத்துரைத்தல்

1. நூலாக்கத்தில் ஏற்படும் பத்துக் குற்றங்கள்
2. பத்து அழகுகள்
3. நூலாக்கத்திற்குத் தேவையான உத்திகள்

தொல்காப்பியரைப் போலவே இலக்கியத்தை பயனீட்டுக் கொள்கை அடிப்படையில் அணுகியுள்ளார்.

"அறம் பொருளின்பம் வீட்டை தனூற் பயனே"

வாசகரை மையப்படுத்திப் பேசும் ஏற்புநிலைத் திறனாய்வின் குணங்களை இலக்கண ஆசிரியர்களின் பொருள்கோண் முறையில் காணலாம்.

# அணியிலக்கணம்

தொல்காப்பிய உவமையியல்: மொழியை அழகியலோடு நெருக்கமான இணைப்பது அடிப்படையில் உவமைதான்.

இடைக்கால அணியிலக்கணம்:

1. வடமொழி அலங்கார இலக்கணத் தொடர்பால் தனியாகவே அணியிலக்கண நூல்கள் தோன்றின.
2. வடமொழி காவிய தரிசனம் – தண்டியலங்காரம் என மொழிபெயர்க்கப்பட்டது.
3. தண்டியலங்காரம்: இடைக்காலத் தமிழ்த் திறனாய்வின் ஆழத்தையும் வடமொழிச் சார்பையும் எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

# அணியிலக்கணம்

தண்டியலங்காரம்: மொழியைப் பயன்படுத்தும் வித்தைகளை எல்லாம் ஆய்ந்து, அவைகளுக்கிடையே உள்ள நுணுக்கமான வேறுபாடுகளைக் கணக்கில் கொண்டு அவைகளுக்குத் தனித்தனிப் பெயரிட்டு வகுத்துக் காட்டியிருக்கும் ஆற்றல் வியக்கத்தக்கவையாகும்.

“ஓர் அறிவியல் கல்வி” போலப் படைப்பின் மேல் செயல்பட்டுள்ளார்கள்.

இலக்கியத்தில் அணியின் இடம் குறித்து இவ்வளவு விரிவாகத் தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாற்றில் இதற்கு முன்பும் பின்பும் ஆய்வு நடத்தப்படவில்லை.

மு. வரதராசனார் குறிப்பிடுவதுபோல, இலக்கியத்தின் ஒரு கூறுதான அணி. எல்லாமே அணிகளுக்குள் அடக்கம் என தாங்கள் வகுத்துப் பெயரிட்ட விதிகளுக்குள்ளேயே வீழ்ந்துவிட்டனர்.

# அணியிலக்கணம்

காவிய இலக்கணம்: தன்னிகரில்லாத் தலைவனைக் கொண்டதாகக் காவியம் விளங்கவேண்டும் என வகுத்தளித்துள்ள காவியக் கூறுபாடுகள் ஆழமான ஆய்விற்கு இடம் தருபவை.

தமிழின உளவியல் என ஒன்று உருவாக இக்காவியக் கோட்பாடுகள் எந்த அளவிற்குக் காரணமாக அமைந்துள்ளன என்பதை ஆராயவேண்டும்.

தமிழில் உள்ள அணியிலக்கண நூல்கள் அனைத்தையும் விரிவான ஆய்வுக்கு உட்படுத்தி, (1) இன்றைய திறனாய்வுத் துறைக்கு ஏற்ப அவற்றைப் புதுப்பிக்க வேண்டும். (2) வரலாற்று அடிப்படையில் தொகுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

# யாப்பிலக்கணம்

குறிப்பிட்ட கருத்தை அக்கருத்திற்கு இயைவான ஓசை ஒழுங்கோடு சொற்களைக் கட்டும்போதுதான் வெளியீட்டுத் திறம் முழுமை அடைகிறது என்று தமிழ் இலக்கியத் திறனாய்வாளர்கள் கருதியதால், யாப்பு பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

சொல்ல நினைக்கும் பொருளைக் குறைவறச் சொல்லி முடிப்பதற்கு யாப்பிலக்கணம் துணை செய்கிறது.

தொல்காப்பியம் கவிதையில் சொற்களைக் கட்டுவதில் வேண்டிய கவனத்தை வலியுறுத்துகிறது.

“எழுத்து முதலா ஈண்டிய அடியிற்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்”

# யாப்பிலக்கணம்

காலத்தேவைக்கு ஏற்ப மாற்றம் செய்தல்

தொல்காப்பியர் காலத்தில் இறுக்கமாகத் தூய்மையான ஓசை நயத்தோடு விளங்கிய பாக்கள், இடைக்காலத்தில் எளிமைப்படுத்தப்பட்டன; மாற்றத்திற்கு உள்ளாகின. (யாப்பருங்கலக் காரிகை - அமிதசாகரர்)

1. காலத்தேவைக்கேற்ற மாற்றம் ஒருகட்டத்தில் கவிதையாக்கத்திற்கு யாப்பிலக்கணமே வேண்டாம் என்று சொல்லுமளவுக்கு வந்துள்ளது.
2. சொற்களை யாப்பு விதிக்கு உட்பட்டுக் கட்டிவிட்டால் அது கவிதை எனப்பட்டது.
3. இதற்கு மாற்றாக எழுந்த யாப்பு மறுத்த புதுக்கவிதையின் போக்கும் தவறானதுதான் என்பதை எண்பதுகளில் உணரப்பட்டது.

பல்கலைக்கழக அளவிலான கூட்டு முயற்சியின் மூலம் யாப்பிலக்கணக் கோட்பாட்டாராய்ச்சியை நடத்த வேண்டும். இன்றைய திரைப்படப் பாடல்கள் வரை அக்கோட்பாடு கொண்டு ஆராயப்பட வேண்டும்.

# பொருளிலக்கணம்

இடைக்காலத்தில் தோன்றிய தமிழ் – சமஸ்கிருத (வடமொழி) போராட்டச் சூழலில் தோன்றிய நூல்கள் நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய பொருளிலக்கண நூல்கள்.

1. தொல்காப்பியரின் அகத்திணையியல், புறத்திணையியல் கோட்பாடுகளின் விரிவாகத் தோன்றியவை இவை.
2. சங்க இலக்கியங்களுக்குத் திணை, துறை சுட்டுவதற்கு இந்நூல்கள் பயன்பட்டுள்ளன.
3. வடமொழி ஆதிக்கத்திற்கு எதிராக அக்காலத்தில் இத்தகைய நூல்கள் எந்த அளவிற்குத் தேவைப்பட்டன என்பதை வரலாற்றுப் பூர்வமாப் புரிந்துகொள்ள வேண்டும்.

# பாட்டியல் நூல்கள்

இடைக்காலத்தில் தோன்றிய நூற்றுக்கணக்கான சிற்றிலக்கியங்களை (பிரபந்த இலக்கியங்கள்) ஒழுங்குபடுத்தி ஒவ்வொன்றுக்கும் விதிமுறைகளை வகுத்தளித்த முயற்சியை அக்கலத் திறனாய்வு முறையாகச் சுட்டலாம்.

1. கி.பி. 10ஆம் நூற்றாண்டு தொடங்கி 19ஆம் நூற்றாண்டுவரை ஏராளமான பாட்டியல் நூல்கள் வெளிவந்தன. (சமஸ்கிருதச் செல்வாக்கு கூடுதல்.)
2. பொருத்தம், நச்செழுத்து ஆகிய கோட்பாடுகளையும் தமிழில் செயற்கையாகப் புகுத்தித் தாழ்வுற்றன – அ. சிதம்பரநாதன் செட்டியார்.

---

பொருத்தம் : செய்யுள் முதன்மொழிப் பொருத்தம்:

ஐ உ எ ச ட த ப தெய்வகதி
அ ஈ ஊ ஏ ந ண ந ம மக்கட்கதி
ஒ ஓ ய ர ல ழ ற விலங்குகதி
ஐ ஒ உ வ ள ன நரககதி

நச்செழுத்து : நூலின் முதற்செய்யுளில் முதல் எழுத்தாக அமைக்கத்தகாத எழுத்துக்கள்.

# பாட்டியல் நூல்கள்

பிரபந்தங்களின் வகை, அவற்றின் இலக்கணங்கள், அவற்றைப் பாடவேண்டிய முறை, வெவ்வேறு வருணத்தாருக்குரிய பாடல்கள், அவ்வருணத்தார் இயல்புகள், பாட்டுடைத்தலைவர் நூல் கேட்கவேண்டிய முறை, நூல் அரங்கேற்றம் செய்வதற்குரிய அவையின் இயல்பு, புலவர்களின் வகை போன்றவை பாட்டியலுள் அடங்குகின்றன.

---

பாட்டியல் நூல்கள் சில: இந்திரகாளியம், இலக்கணவிளக்கப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், தாத்தாத்திரேயர் பாட்டியல், நவநீதப் பாட்டியல், பண்டாரப் பாட்டியல், பன்னிரு பாட்டியல், பிரபந்த தீபம், பிரபந்த தீபிகை, பிரபந்தத் திரட்டு, முத்துவீரியப் பாட்டியல், வெண்பாப் பாட்டியல்/வச்சணந்திமாலை

# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு

அலகு 2:

## திருவள்ளுவமாலை, பிற திறனாய்வுகள்

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

26.08.2020

# திருவள்ளுவமாலைதோற்றக்கதை

திருவள்ளுவமாலையின் தோற்றம், காலம், அதன் ஆசிரியர்கள் குறித்துப் பல கருத்துவேறுபாடுகள் நிலவுகின்றன.

பாண்டியன் அவையில் அரங்கேற்றச் செல்லல் – சங்கப் பலகையில் இருந்த புலவர்கள் வள்ளுவர் குலம் குறித்து நகைத்தல் – சங்கப் பலகை குறளளவு குறுகல் - புலவர்கள் பொற்றாமரைக் குளத்தில் வீழ்தல் – தவறுணர்தல் – நூல்நயம் கேட்டல் – ஆளுக்கு ஒரு வெண்பா பாடுதல் – திருவள்ளுவமாலையாகத் தொகுத்தல்.

இரா. இராகவய்யங்கார் : இது ஒரு பொய்யைக் கட்டிப் பேசியதாகக் கூற இயலாது; இதனால் திருக்குறள் அரங்கேறியது பாண்டியன் அவையகத்தென்றும் ஆண்டுப் புலவரும் உடனிருந்து கேட்டனரென்றும் கேட்டார் பலர் பாயிரம் சொற்றார் என்றும் தெரியலாகும்.

# திருவள்ளுவமாலைதோற்றக்கதை

1. இடைக்காலத்துக்கு உரிய தெய்வத்தன்மையோடு கூறப்பட்டுள்ளது.
2. எல்லா நூல்களும் திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.
3. பொறாமை உணர்வால் விரும்பத்தகாத நிகழ்வுகள் அன்றும் நிகழ்ந்துள்ளன.
4. ஆயினும் நூலின் இலக்கியத்திறன் எல்லாவற்றையும் வென்று நிலைபெறுகிறது.

பிற்காலப் புலவர்களால் இயற்றப்பட்டிருக்க வேண்டும் – டி.வி. சதாசிவ பண்டாரத்தார், வ.உ.சிதம்பரம்பிள்ளை

ஒருவரே கி.பி. 9ஆம் நூற்றாண்டில் இயற்றியிருக்க வேண்டும் – எம். சீனிவாச ஐயங்கார்

# திருவள்ளுவமாலைதோற்றக்கதை

சங்ககாலப் புலவர்களால் பாடப்பட்டு 9ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டு, திருவள்ளுவமாலை எனப் பெயரிடப்பட்டிருக்க வேண்டும் – ஏ.வி. சுப்பிரமணிய அய்யர்

இடைக்கால மீட்பியக்கத்தில் தோன்றிய உரைகாரர் போல அந்த மீட்பியக்கத்தில் திருவள்ளுவமாலையும் உருவாகியிருக்க வேண்டும். – க. பஞ்சாங்கம்

திருவள்ளுவ மாலை ஒரு திறனாய்வு நூல் – ஏ.வி. சுப்பிரமணிய அய்யர்

“பண்டைத் தமிழ் இலக்கியத்தில் காணப்பெறும் ஒரே விமரிசன ரத்தின மாலைதான் திருவள்ளுவமாலை.”

# திருவள்ளுவமாலைதோற்றக்கதை

நம்மாழ்வார் கம்பரைப் பாடிய சடகோபர் அந்தாதி, சிவப்பிரகாச சுவாமிகள் சைவ சமயக் குரவர்களைப் பாடிய நால்வர் நான்மணி மாலை முதலான நூல்கள் சமய நூல்களாக அமைந்துவிட்டன.

திருவள்ளுவ மாலைதான் பல்வேறு நயங்களுடனும், இலக்கியச் சிறப்புக்களையே நோக்கிச் செய்த விமரிசனப் பண்புடனும் விளங்குகிறது – ஏ.வி. சுப்பிரமணிய அய்யர்

திருவள்ளுவமாலையின் மூலம் திருக்குறள் வரலாற்றில் ஆரிய முத்திரையைப் பதிக்கவும், திருக்குறளை ஆரியச் சொத்து என உரிமை கொள்ளவுமான முயற்சிகள் நடத்துள்ளன – தி.சு. சத்தியம்

# திருவள்ளுவமாலைதோற்றக்கதை

10 வெண்பக்கள் சமஸ்கிருத வேதத்தோடு திருக்குறளை ஒப்பிட்டுப் பாடுகின்றன.

பல வெண்பாக்கள் வேதத்திலிருந்தே திருக்குறள் பிறந்ததாகக் கூறுகின்றன.

வேதத்தினும் உயர்ந்தது, அதற்கு ஈடானது என்றும் சில வெண்பாக்கள் பாடப்பட்டுள்ளன.

இவ்வாறு ஒப்பீட்டுப் முறைத்திறனாய்வாகவும் பாராட்டுமுறைத் திறனாய்வாகவும் வெண்பாக்கள் அமைந்துள்ளன. சில வியப்புமுறைத் திறனாய்வையும் செய்துள்ளன.

# திருவள்ளுவமாலைதோற்றக்கதை

திறனாய்வாளன் என்பவனும் மற்றவர்களைப் போலச் சமூக வரலாற்று விதிகளுக்குள் அடங்குபவனே; அவைகளிலிருந்து அவன் விலகி நின்றுவிட முடியாது – கிரகாம் கூப்.

திருவள்ளுவமாலையை எழுதிய புலவர்களின் வெண்பாக்கள் நல்ல திறனாய்வுக் கூறுகளைக் கொண்டுதான் விளங்குகின்றன எனக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. – க. பஞ்சாங்கம்

# அ. இலக்கிய அமைப்பு

## சங்ககால இலக்கிய அமைப்பு

சங்க காலத்தில் புதிதாக வரும் இலக்கியத்தைக் குறித்துப் பேசுவதற்கும் சுவைப்பதற்கும் ஓர் அமைப்பு இருந்துவந்துள்ளது.

“புதுமொழி கூட்டுண்ணும் புரிசை” – கலித்தொகை

“நீள் மாடக் கூடலார்
புலநாவிற் பிறந்த சொல்புதிது உண்ணும் பொழுது” – கலி 35

“தொல்லாணை நல்லாசிரியர்
புணரி கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன்” – மதுரைக்காஞ்சி 761-765

# அ. இலக்கிய அமைப்பு

இவ்வமைப்பு அரசனின் அவைக்களத்தோடு இணைந்து செயல்பட்டிருக்கலாம்

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர்" – மாங்குடி மருதன், புறம். 72

இடைக்காலத்தில் : மதுரையில் சமணர்கள் கி.பி.470இல் வச்சிரநந்தி என்பார் மூலம் திராவிட சங்கம் என்று ஓர் அமைப்பை நடத்தியுள்ளனர். "இச்சங்கம் சமயப்பணியும் இலக்கியப் பணியும் ஆற்றி வந்திருக்க வேண்டும்." – எம். சீனிவாச அய்யங்கார்.

# ஆ. அரங்கேற்றம்

அரங்கேற்றம் என்பதே மதிப்பீட்டுச் செயல்பாடாக இருந்துள்ளது.

1. தொல்காப்பியம் – அதங்கோட்டாசான் முன் – பாண்டியன் அவையில்
2. பட்டினப்பாலை – அரங்கேறிய மண்டபம் சோழநாட்டில் இருந்துள்ளது என்பதைத் திருவெள்ளறை சாசனம் தெரிவிக்கிறது.

இந்த அரங்கு இன்றைக்கு உள்ள தணிக்கைக் குழு போல் இயங்கியது – வ.சுப. மாணிக்கம்.

1. முற்கால நூல் அரங்கேற்றம் இக்கால நூல் மதிப்பீட்டை ஒத்தது.
2. செய்யுள் நூல்கள் அரங்கேற்றப்படும் வழக்கம் இருந்து வந்துள்ளது.
3. நல்லிசைப் புலவர்கள் அவைக்கு வரும் நூல்களை நுணுகி ஆராய்ந்து அறிவென்னும் துலாக்கோலில் இட்டு மதிப்பிட்டனர். – வி.நா. மருதாசலக் கவுண்டர்

# ஆ. அரங்கேற்றம்

அரங்கேற்ற வேலைப்பாடுகள் எவ்வாறு அமைந்திருந்தன என்பது திட்டவட்டமாக அறியக்கூடியதாக இல்லை.

இவ்வரங்கேற்ற நடைமுறைகள் எழுதப்பட்டுக் காப்பாற்றி வைக்கப்பட்டிருந்தால், அது தமிழ் இலக்கியத் திறனாய்வுத் துறையின் களஞ்சியமாக இன்று விளங்கும். – ந. சுப்பிரமணியம்

தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாற்றைத் தேடிச்செல்லும் இலக்கிய மாணவர் அரங்கேற்றம் பற்றிய செய்திகளில் ஆழமாக இடுபடவேண்டும்.

# இ. தொகுப்புக்கலை

தொகுப்புக்கலை ஒருவகைத் திறனாய்வு நெறியை உள்ளடக்கியது

தமிழ் இலக்கிய வரலாற்றில் இதற்குச் சிறப்பிடம் உண்டு.

பாடல்களைத் தேர்ந்தெடுப்பதே திறனாய்வாளரின் முதல் வேலை – வி.எசு. இலியட்

போகிற போக்கில் சிறு மோப்பத்தினாலேயே கவிதையை அடையாளம் கண்டுகொள்கிற உணர்வு நலம் செறிந்த திறனாய்வு மனப்பான்மை (– கெலன் கார்டன்) இல்லாமல் தொகுப்புப் பணி சிறப்பாக நடந்திருக்க முடியுமா என்பது ஐயமே.

மேல்கணக்கு, கீழ்க்கணக்கு என்று சில விதிகளைத் தழுவிப் பாகுபாடு செய்திருப்பது அவரது விமரிசனப் பண்பை எடுத்துக்காட்டுகிறது – ஏ.வி.சுப்பிரமணிய அய்யர்.

# இ. தொகுப்புக்கலை

ஏ.வி.சுப்பிரமணிய அய்யர்:

1. எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் சில இலக்கியக் கொள்கைகளின் அடிப்படையிலேயே தொகுக்கப்பட்டிருக்க வேண்டும்.
2. இடைக்காலத் திருமுறைகளும், திவ்விய பிரபந்தமும் சமய உணர்ச்சியும், இலக்கியக் கலை ஆர்வமும் ஒருங்கே கலந்த ஓர் இயக்கத்தின் விளைவாகவே தொகுக்கப்பெற்றிருக்க வேண்டும்.

பிற்காலத்தில் நடந்துள்ள தொகுப்புப் பணிகள்: புறத்திரட்டு, பெருந்திரட்டு, குறுந்திரட்டு, சிவப்பிரகாசத் திரட்டு, தனிப்பாடல் திரட்டு, பன்னூல் திரட்டு

சென்ற நூற்றாண்டில்: பாரதியாரின் கவிதைத் திரட்டு, செஞ்சொற் கவிக்கோவை, தமிழ்க் கவிதைக் களஞ்சியம்...

# ஈ. புலவர் வரலாறு

இடைக்காலத்தில் புலவர்களின் வரலாற்றை எழுத முயற்சித்துள்ளனர். ஆங்கிலப் புலவர்களின் வரலாற்றை எழுதிய டாக்டர் சான்சன் போன்று இவர்கள் திறனாய்ந்து எழுதவில்லை.

சமயத் தொண்டர்கள் குறித்துக் கூறுபவை

கம்பர், நம்மாழ்வாரைப் பற்றி எழுதியதாகக் கூறப்படும் சடகோபர் அந்தாதி

உமாபதி சிவாச்சாரியார் எழுதியுள்ள சேக்கிழார் புராணம்

சிவப்பிரகாச சுவாமிகளின் நான்மணி மாலை

# ஈ. புலவர் வரலாறு

## சதகங்கள்

புலவர்கள் வரலாற்றைக் கூறும் நோக்கத்துடன் தோன்றியவை. சதகம் என்ற சிற்றிலக்கியத்திற்கு ஏற்ப கற்பனை நயத்துடன் புலவர்களின் வரலாற்றைக் கூறுகின்றன.

படிக்காசுப் புலவரின் தொண்டை மண்டலச் சதகம்

சோழமண்டலச் சதகங்கள், கொங்கு மண்டலச் சதகங்கள்

18ஆம் நூற்றாண்டில்…

1. தமிழ் நாவலர் சரிதை – 51 புலவர்களின் வாழ்வில் நடந்த நிகழ்வுகளைக் கூறிச்செல்கிறது.
2. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் புலவர் வரலாறு
3. வீராசாமி செட்டியாரின் விநோதரசமஞ்சரி
4. ஆ. சதாசிவம் பிள்ளை – பாவலர் சரித்திரதீபம்

# அருட்பா மருட்பா போர்

ஆறுமுகநாவலருக்கும் (1823-1874) வள்ளலாருக்கும் (1823-1879) இடையில் நடந்த அருட்பா தொடர்பான போராட்டத்தை ஆய்வாளர்கள் தமிழர்தம் திறனாய்வுக் கூறாகக் கொள்கின்றனர்.

ஆறுமுக நாவலர் சார்பாக கதிர்வேற் பிள்ளை மருட்பா என்ற நூலையும்

வள்ளலார் சார்பாக மறைமலையடிகள் அருட்பா ஆய்வுரை என்ற நூலையும் வெளியிட்டுள்ளனர்.

சென்னை, காஞ்சி, திருச்சி ஆகிய இடங்களில் கூட்டம் நடத்தி, மறைமலையடிகளும் கதிர்வேற் பிள்ளையும் வாக்குவாதம் செய்துள்ளனர்.

மத அடிப்படையிலான திறனாய்வாக இவற்றைக் காணவேண்டும். தமிழ்த் திறனாய்வு வரலாற்றின் ஒரு கூறாக இதனைக் காணவேண்டும்.